**கம்பஹா மாநகர சபை**
**கம்பஹா மாவட்டம்**

# 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 யூலை 22 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 நவம்பர் 19 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 திசெம்பர் 04 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பஹா மாநகர சபையின் சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு களஞ்சிய இருப்புக்களை விநியோகித்தல் ரூபா 37,497,152 ஆக இருந்த போதிலும், அது நிதிக் கூற்றுக்களில் ரூபா 38,420,400 ஆக காண்பிக்கப்பட்டமையினால் செலவினம் ரூபா 923,248 தொகை அதிகரித்தும், அப்பெறுமதியால் களஞ்சிய இருப்புக்கள் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | களஞ்சிய இருப்புக்ளை விநியோகித்தல் ஆரம்ப பட்டோலையில் குறைவாக பதியப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் உரிய களஞ்சிய பதிவேட்டையும் அறிக்கையையும் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | சபையின் 39 ஊழியர்களிடம் இருந்து சம்பளமற்ற விடுமுறைகளுக்காக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த ரூபா 174,261 தொகை கடன்பட்டோராக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய மீதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சம்பளமற்ற விடுமுறைகளை அறவிடல் மற்றும் அறவிட வேண்டிய சம்பளங்கள் இறுதி கணக்குகளுக்காக கடன்பட்டோர் மீதியாக பதியப்படாமையினை ஏற்றுக் கொள்கின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஊழியர் சேலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்பு பணம் மற்றும் மிகைக் கட்டணம் ரூபா 3,884,328 ஆகவும், நிதிக் கூற்றுக்களில் ரூபா 3,500,000 ஆகவும் காண்பிக்கப்பட்டமையால், ரூபா 384,328 தொகையினால் கடன்கொடுத்தோர் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கடன்கொடுத்தோராக ஒதுக்குதல் ரூபா 384,328 இனால் குறைக்கப்பட்டிருந்ததுடன் 2020.01.01 இல் ஆரம்ப மீதி வழுவினை சரி செய்வதன் கீழ் சரிசெய்யப்படும். |
| (ஈ) | குறிப்பாக இனங்காணப்படாத கடந்த ஆண்டின் 07 மூலதன செலவின விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டின் சேமிப்பு ரூபா 67,403,003 தொகை மற்றும் மீளாய்வாண்டில் 136 செலவின விடயங்களின் நிதி ஏற்பாட்டின் சேமிப்பு ரூபா 253,588,643 தொகை என்பன நிதிக் கூற்றுக்களில் கடன்கொடுத்தோர் ஆக ஒதுக்கப்பட்டிருந்தது. | குறித்த கடன் கொடுத்தோர் பெறுமதி இனங்காணப் பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | முன்னைய ஆண்டுகளின் கடன்கொடுத்தோர் நிதி ஏற்பாட்டை ஒதுக்குவதற்கான பணிகள் நிறைவேற்றப்படாமை மற்றும் தாமதங்கள் ஏற்பட்டதன் அடிப்படையில் தவறவிடப்பட்ட மற்றும் உத்தேசிக்கப்பட்ட செயற்திட்டங்களுக்கான நிதி ஏற்பாட்டின் சேமிப்பு 2019.12.31 இல் உள்ளவாறு கடன்கொடுத்தோர் மீதியாக ஒதுக்கம் செய்யப்பட்டிருந்தது. |
| (உ) | முன்னைய ஆண்டுகளுக்குரிய 77 செயற்திட்டங்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 3,874,348 தொகை மற்றும் மீளாய்வாண்டின் போது நூலக புத்தகங்களை கொள்வனவு செய்வதற்காக செலுத்த வேண்டிய ரூபா 540,979 தொகை கடன்கொடுத்தோராக கணக்குகளில் காண்பிக்கப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,996,484 பெறுமதியான நூலக புத்தகங்கள் நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியான பெறுமதி இனங்காணப் பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நூலக புத்தகங்களை கொள்வனவு செய்வதற்குரிய கடன்கொடுத்தோர் ஒதுக்கங்கள் தவறவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 1,996,484 பெறுமதியான நூலக புத்தகங்கள் நிலையான சொத்தாக இனங்காணப்படாமல் இருந்தது. |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது உடன்படிக்கை செய்யப்படாத உள்ளுர் உணவகம் நிர்மாணம் மற்றும் யக்கல கடைத்தொகுதி நிர்மாணம் என்ற இரண்டு செயற்திட்டங்களின் கணக்குகளில் ரூபா 131,938,000 ஒதுக்கப்பட்டிருக்கும் போது மீண்டும் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஏற்பாட்டின் | சரியான பெறுமதி இனங்காணப் பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கடன்கொடுத்தோர் நிதி ஏற்பாட்டை சரிசெய்வதற்கும் கணக்குகளை சரிசெய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | கீழ் ரூபா 135,431,465 தொகை கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (எ) | நிலையான சொத்துக்கள் கணக்கு மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமான பங்களிப்பு கணக்கின் ஆரம்ப மீதிகள் என்பவற்றின் வேறுபாடான ரூபா 1,263,914 தொகை இனங்காணப்படாமல் திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபடுத்துலுக்கான வருமான பங்களிப்பு மற்றும் உதவிகளின் பங்களிப்பு கணக்குகளுக்கு இடையே சமப்படுத்தப்படாத மீதி ரூபா 1,263,914 ஆகும். அது சீராக்கப்பட்டுள்ளது. |
| (ஏ) | மீளாய்வாண்டின் போது அகற்றப்பட்ட ரூபா 18,104 தொகையான நூலக புத்தகங்கள் நிதிக்கூற்றுக்களில் ரூபா 181,014 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நூலக புத்தகங்களின் அகற்றப்பட்ட பெறுமதி ரூபா 18,014 ஆக இருந்ததுடன், அது ரூபா 181,014 ஆக பதிவு செய்யப்பட்டதன் காரணத்தினால் கணக்கீட்டு வழு ஏற்பட்டிருந்தது. |
| (ஐ) | நகர அபிவிருத்தி செயற்திட்டத்தில் கடைகளுக்கான நிலுவை கடை வாடகை தண்டப்பணம் ரூபா 971,910 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | முறைப்பாட்டு செயற்குழுவின் குறித்துரைக்கப்பட்ட தீர்மானத்தை பெறும் வரை இந்த தண்டப்பணத்தை அறவிடல் தொடர்பான பெறுமதிகள் கணக்குகளில் காண்பிக்கப்படவில்லை. இந்த கடைகளுக்காக கடை உரிமையாளர்கள் பணம் செலுத்தும் போது நடவடிக்கை எடுக்கும் போது உரிய தண்டப்பணத்தை அறவிடல் காசு அடிப்படையின் கீழ் மேற்கொள்ளப்படும். |
| (ஒ) | மீளாய்வாண்டிற்குரிய ஆதனவரி மேலதிக வரவுப் பெறுமதி ரூபா 679,493 தொகை திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | வழுக்களை சரிசெய்யும்வகையில் முன்னைய காலப்பகுதிகளுக்குரிய தான பிரகாரம் திரண்ட நிதியத்தில் |

| | | | |
|---|---|---|---|
| | | | சீராக்கப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. |
| (ஓ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்படாதிருந்த ரூபா 99,856 தொகையான 21 விடயங்கள் நிலையான சொத்தின் கீழும் ரூபா 75,480 தொகையான 02 உபகரணங்கள் தளபாடங்கள் மற்றும் பொருத்திகளின் கீழும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நிலையான சொத்து கணக்கை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஔ) | மீளாய்வாண்டில் செயற்திட்டங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 419,300 தொகையான 12 விடயங்கள் மற்றும் ரூபா 1,954,370 தொகையான 34 நுகர்வு பொருட்கள் என்பன நிலையான சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நிலையான சொத்து கணக்கை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (க) | 2019 யூலை மாதத்தின் போது வாகனங்களை பழுதுபார்த்தலுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 200,500 தொகையான 12 விடயங்கள் நிலையான சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (கா) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட Network System தளபாடம், பொருத்திகளின் கீழ் ரூபா 63,900 ஆகவும், ஏனைய நிலையான சொத்துக்களின் கீழ் ரூபா 166,100 ஆகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (கி) | மீளாய்வாண்டில் மூலதன மானிய சிட்டையிடல்களில் பெறுவனவு ரூபா 51,753,398 ஆக இருந்த போதும், ரூபா 32,630,345 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரியான மீதியை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (கீ) | மீளாய்வாண்டில் மூலதன செயற்திட்டங்களுக்கான பெறுவனவுகள் ரூபா 29,989,676 தொகை கடன்பட்டோர் கணக்கில் செலவு வைப்பதற்கு பதிலாக செயற்திட்ட வைப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (கு) | முன்னைய ஆண்டில் செலுத்த வேண்டிய 04 மீதிகளின் கூட்டுத்தாகையான ரூபா 1,389,416 | சரியாக கணக்கீடு செய்யப்பட | பின்னர் பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை நடப்பாண்டின் ஆரம்ப மீதியாக முன் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | |
| (கூ) | 2015 ஆம் ஆண்டின் போது 54 ஊழியர்களுக்காக செலுத்த வேண்டிய ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய பங்களிப்பு பணம் ரூபா 432,313 தொகை மற்றும் அதற்குரிய ரூபா 216,150 தொகையான மிகைக் கட்டணம் என்பன கடன்கொடுத்தோராக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரியாக கடன்கொடுத்தோர் கணக்கின் கீழும் செலவின கணக்கின் கீழும் காட்டப்படும். |
| (கெ) | 2018 செப்தெம்பர் 27 ஆம் திகதி செலுத்தப்பட்ட ரூபா 100,000 தொகையான வீட்டு வாடகை முற்பணக் கணக்குகளில் காண்பிக்கப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 04 சினிமா அரங்குகளில் இருந்து 2010 முதல் கிடைக்க வேண்டிய ரூபா 5,463,439 தொகையான களியாட்ட வரி மீதியில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 1,543,525 தொகையும், 5 – 10 வருடங்களுக்கு இடையே ரூபா 2,182,421 தொகையும், 2 – 5 வருடங்களுக்கு இடையே ரூபா 1,054,475 தொகையும் காணப்பட்டது. | பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவைப் பணத்தை அறவிடல் தொடர்பாக இறுதி தீர்மானம் எடுப்பதற்குரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 கணக்கு விடயங்களுக்குரிய கணக்குகள் மற்றும் பட்டோலைகளுக்கு இடையே ரூபா 76,639,470 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | கணக்குகளையும் பட்டோலைகளையும் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.3.4 கணக்காய்விற்கு தேவையான சான்றுகள் காணப்படாமை.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலுவையாக இருந்த ஆதனவரி ஆரம்ப மீதி ரூபா 1,602,671 தொகை, ஆதனவரி முற்பெறுவனவுகள் ஆரம்ப மீதி ரூபா 1,047,068 தொகை, மூலதன மானிய கடன்பட்டோர் ரூபா 40,811,186 தொகை என்பவற்றை கணக்குகளில் இருந்து அகற்றுதல் மற்றும் திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்ட சீராக்கங்கள் ரூபா 57,752,346 தொகை தொடர்பாக முறையான அங்கீகாரம், பதிவேடு மற்றும் பட்டோலைகள் என்பன கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | உரிய பதிவேடுகள் நாளதுவரையாக பேணப்பட வேண்டும். | உரிய பதிவேடுகள் மற்றும் பட்டோலைகள் தயாரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1946 இன் 30 ஆம் இலக்க ஆதனவரி மற்றும் மதிப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் பிரிவு இலக்கம் 20. | 05 வருடங்களுக்கு ஒரு தடவை ஆதனவரி மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும், 24,036 எண்ணிக்கையிலான மொத்த ஆதன வரி அலகுகளில் இருந்து பிரதான அலுவலகம் 2011 ஆம் ஆண்டினதும், யக்கல உப அலுவலகம் 2006 ஆம் ஆண்டினதும், மதிப்பீட்டை அடிப்படையாக தற்போது சபையினால் ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆதனவரி மதிப்பீடு மேற்கொள்வதற்காக மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 371 | 691,745 தொகையான 02 முற்பண மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புணிகள் நிறைவு பெற்றதும் உடனடியாக முற்பணங்கள் தீர்த்து வைக்கப்பட வேண்டும். | பெறப்பட்ட முற்பணங்கள் பணிகள் பூர்த்தியடைந்ததும் உடனடியாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்டு 06 மாதங்களை விஞ்சிய ரூபா 93,950 தொகையான காசோலை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 571 | இரண்டு வருடங்களை விஞ்சிய ரூபா 22,939,561 பெறுமதியான 842 பொது வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த காலத்தை விஞ்சிய வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிவேடுகளை நாளதுரையாக்கி வருமானத்திற்கு எடுப்பதற்குள்ள மீதிகளை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 5,246,986 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 114,443,685 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 222,233 கூட்டுப்பெறுமதியான 05 மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரிய தரப்பினருக்க அறிவிக்கப்பட்டுள்ளதுடன் செலுத்தாத பெறுமதிகளுக்காக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 69,209,420 | 86,320,761 | 67,210,697 | 41,689,628 | 56,790,384 | 57,891,101 | 56,026,008 | 36,363,153 |
| (ii) | வாடகை | 39,205,893 | 32,969,470 | 23,846,305 | 3,504,382 | 4,186,282 | 4,086,824 | 4,284,538 | 3,438,447 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 6,650,000 | 6,162,328 | 3,391,920 | 240,411 | 2,745,000 | 3,045,150 | 3,232,788 | 107,087 |
| (iv) | ஏனைய வருமானம் | 110,559,070 | 81,439,177 | 103,687,456 | 133,521,814 | 185,288,525 | 169,377,380 | 262,862,452 | 102,864,318 |
| | | 225,624,383 | 206,891,736 | 198,136,379 | 178,956,235 | 249,010,191 | 234,400,455 | 326,405,785 | 142,773,006 |

#### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டில் உள்ளபடியான வருமானம் ரூபா 326.4 மில்லியனுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் உள்ளபடியான வருமானம் ரூபா 198.1 மில்லியன் வரை ரூபா 128.3 மில்லியனால் குறைவடைந்திருந்தது. இந்த குறைவடைவிற்கு ஏனைய வருமானங்கள் ரூபா 159.2 மில்லியனால் குறைவடைந்தமையே பிரதான காரணமாக இருந்தது. | வருமானத்தை அறவிடுவதற்கு செயற்திறனாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முத்திரை வருமானம் கிடைக்கப் பெறாமை மற்றும் மூலதன மானிய தாரர்களிடம் இருந்தான பெறுவனவுகள் குறைவாக இருந்தமையும் இதற்கு தாக்கமளித்த காரணங்களாகும். |

### 2.3.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதியில் 1 - 3 வருடங்கள் வரை 10,815,269 தொகை, 3 – 5 வருடங்கள் வரை 6,044,854 தொகை, 5 – 10 வருடங்கள் வரை ரூபா 12,636,519 தொகை மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 2,575,014 தொகை என்பன காணப்பட்டது. | நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கு செயற்திறனாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒட்டுமொத்த நிலுவை ஆதனவரி மீதியை அறவிடுவதற்காகவும் நிலுவை வருமானத்தை அறவிடும் செயல் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் மற்றும் மேற்பார்வைகளுக்காக விஷேட வருமான உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. |

### 2.3.4 வியாபார வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபார வரி நிலுவை மீதி ரூபா 376,090 ஆக இருந்ததுடன், அதில் 01 வருடத்திற்கு குறைவான மீதி ரூபா 157,309 தொகையும், 2 – 3 வருடங்களுக்கு இடையிலான மீதி ரூபா 196,481 தொகையும் மற்றும் 3 – 5 வருடங்களுக்கு இடையிலான மீதி ரூபா 22,300 ஆகவும் காணப்பட்டது. | நிலுவை வியாபார வரி மீதியை அறவிடுவதற்கு முறையான வேலைத் திட்டமொன்று ஈடுபடுத்தப்பட வேண்டும். | வியாபார வரி நிலுவை மீதியை அறவிடுவதற்காக தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.3.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அனுமதிப்பத்திரக் கட்டண நிலுவை மீதியில் 01 வருடத்திற்கு குறைவான ரூபா 157,174 தொகையும், 2 – 4 வருடங்களுக்கு இடையிலான மீதி ரூபா 83,237 ஆகவும் காணப்பட்டது. | நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை மீதியை விரைவாக அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.3.6 ஏனைய வருமானம்**

**(அ) தொலைத்தொடர்பு கோபுரங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் மெய்மெய்யாய்வு அறிக்கையின் பிரகாரம் 12 தொலைத்தொடர்பு கோபுரங்கள் மற்றும் அதில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தொலைபேசி சேவை வலையமைப்புக்கள் 03 ஆகும். அதில் 06 கோபுரங்களின் ஆதனவரி மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன், ஆதனவரி மதிப்பீடு செய்யப்பட்ட 04 கோபுரங்களுக்காக 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 88,866 தொகையான ஆதனவரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் கட்டணம் தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான நிலுவைக் கட்டணத்தை அறவிடுவதற்காக தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) வாகன தரிப்பிட கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு 05 வாகன தரித்து வைத்தல் இடங்களில் அறவிடவேண்டிய ரூபா 1,641,426 தொகையை அறவிடுவது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விரைவாக இதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுத்து இந்த பணத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) விருந்தினர் விடுதி கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கம்பஹா விருந்தினர் விடுதியில் இருந்து ரூபா 3,453,276 தொகையான நிலுவை மீதியொன்று அறவிடுவதற்கு காணப்பட்டது. | நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவைக் கட்டணத்தை அறவிடுவதற்காக அறிவித்தல் மற்றும் தொடர்ச்சியான பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.3.7 முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2010 இன் 04 ஆம் இலக்க மேல் மாகாண முத்திரைக் கட்டணத்தை கையளித்தல் கட்டளையின் 02 ஆவது பிரிவின் பிரகாரம் 03 வருடங்களை விஞ்சியிருந்தமையால் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டிற்காக கிடைக்க வேண்டிய ரூபா 2,139,880 தொகையான முத்திரைக் கட்டண வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து முத்திரை வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணி பதிவாளரினால் உரிய முத்திரைக் கட்டணம் தொடர்பான பட்டோலை விநியோகித்தலில் ஏற்பட்ட தாமதம் காரணமாக கால ரீதியில் மேல் மாகாண சபையில் இருந்து இந்த முத்திரைக் கட்டணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 272 ஆவது பிரிவின் கீழ் 39 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 34 விடயங்களுக்காக உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தன. விளம்பர அறிவித்தல்களை பிரசுரித்தலை முறைமைப்படுத்துதல் மற்றும் கட்டணம் அறவிடல், வாகனங்களை தரித்து வைக்கும் இடங்களை முறைமைப்படுத்துதல், சுடலைக் கூடம் தொடர்பான கட்டணங்களை அறவிடல், சேவைக் கட்டணங்களை அறவிடல் மற்றும் தொலைபேசி கோபுர நிர்மாணம் தொடர்பாக 05 உப விதிகள் இது வரையில் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்ட போதும் அந்தந்த பிரிவுகளில் ஆண்டில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட உப நோக்கங்களில் சுகாதாரப் பிரிவில் 07 உம், பொறியியல் பிரிவில் 06 உம், சட்டப் பிரிவில் 02 உம், கால்நடை வைத்திய பிரிவில் 07 உம் மற்றும் உள்ளக கணக்காய்வு பிரிவில் கணக்காய்வு நடவடிக்கைகளும் ஆண்டின் போது நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் உரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) நிதிஏற்பாடு ஒதுக்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வருடாந்த திட்டத்தின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 21.2 மில்லியன் தொகை மினுவாங்கொடை வீதி இரவு விற்பனைச்சாலைகள் மற்றும் யக்கல பல்நோக்கு நிர்மாண செயற்திட்டம் என்பவற்றிற்கு ஆண்டின் வருடாந்த பாதீட்டின் மூலம் நிதிஏற்பாடு ஒதுக்கப்படாமையினால் நிறைவேற்ற முடியாதிருந்தது. | எதிர்பார்த்த திட்டங்கள் சரியாக இனங்கண்டு பாதீட்டில் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட வேண்டும். | இந்த செயற்திட்ட முன்மொழிவுகள் தயாரித்து முழுமையான அங்கீகாரம் பெறப்படாமையின் அடிப்படையில் பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

**(ஈ) எதிர்பார்த்த பணிகள் நிறைவேற்றப்படாமை.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 ஆம் ஆண்டின் பாதீட்டில் சமூக சபைகளுக்காக உதவிகளை வழங்குவதற்கு ரூபா இரண்டு மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதும் அந்த தொகையை கொள்வனவு செய்வதற்கோ அல்லது வழங்கப்படுகின்ற உதவிகள் தொடர்பான திட்டமொன்றோ தயாரிக்கப்படாதிருந்ததுடன், இதன் கீழ் அறநெறி பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் நோக்கமாக காண்பிக்கப்பட்ட போதிலும், அதற்காக எந்தவொரு செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், | நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்த இலக்குகளை வருடத்தில் பூர்த்தி செய்ய வேண்டும். | எதிர்பார்த்த வருமானம் கிடைக்கப் பெறும் என்ற எண்ணக்கருவின் அடிப்படையில பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட போதும், அந்த வருமானம் கிடைக்கப் பெறாமையினால் இதனை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. |

சமூக சபைகளுக்காக முன்னைய ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட உபகரணங்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மாநகர சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(உ) இலக்குகளை நிறைவேற்றுவதில் தாமதம்.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட வேண்டிய ரூபா 2,048,000 தொகையில் நகர சபை சுற்றாடலில் உள்ளூர் உணவகம் அமைக்கும் செயற்திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டங்களுக்காக நிதி ஏற்பாட்டை ஒதுக்கி அவற்றை ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் நிதிஏற்பாடு போதியளவானதாக இருக்கவில்லை. |

**(ஊ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | அரசாங்கத்தின் பெறுகை வழகாட்டி நடைமுறைகளுக்கு புறம்பாக 2019 ஆகஸ்ட் 08 ஆம் திகதி முதல் கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கு தனியார் ஒப்பந்தகாரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9(ஆ) பந்தியின் பிரகாரம் சேவை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனையின் பிரகாரம் சபை தீர்மானம் ஒன்றை எடுத்து தனியார் காணியில் கழிவுப் பொருட்கள் அகற்றப்படுகின்றது. |
| (ii) | கழிவுப் பொருட்களை அகற்றும் போது அளவீடு செய்யும் முறைமையொன்று பயன்படுத்தப்படாதிருந்ததுடன், லோட் ஒன்றிற்கு ரூபா 30,000 என்ற இணக்கப்பாட்டின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சரியாக அளவிடும் முறைமையொன்று பயன்படுத்தப்பட வேண்டும். | தற்போது அளவிடல் முறைமையொன்று மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், அளவிடும் போது கழிவுப்பொருட்களை பெற்றுக்கொள்ளும் நிறுவனத்திற்கு அனுப்புவதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | கழிவுப் பொருட்களை அகற்றுகின்ற இடங்கள் தொடர்பாக 2020 செப்தெம்பர் 07 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம் சுற்றாடலுக்கும் சுகாதாரத்திற்கும் பாதிப்பு ஏற்படும் வகையில் கழிவுப் பொருட்கள் கசிந்து கழிவுப்பொருள் மலை குவிக்கப்பட்டிருந்து. | சுற்றாடலுக்கும் சுகாதாரத்திற்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் கழிவுப் பொருட்களை அகற்றுதல் மேற்கொள்ளப்பட வேண்டும். | இது தொடர்பாக பொது சுகாதார பரிசோதகரினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (iv) | கழிவுப் பொருட்கள் அகற்றப்படுகின்ற இடத்திற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. கழிவுப் பொருள் போடப்படுகின்ற இடத்தில் சுகாதார பாதுகாப்பாக இருந்தமை தொடர்பாக மேற்பார்வையொன்று மற்றும் அது தொடர்பான அறிக்கையிடுமாறு கம்பஹா நீதிமன்றத்தினால் சபையின் சுகாதார பரிசோதகருக்கு கட்டளை வழங்கப்பட்டிருக்கும் போது அது தொடர்பாக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்ட ஆலோசனை மற்றும் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தை பெறுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

**(எ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் அமுல்படுத்துவதற்காக இலக்குகள் 12 சபையினால் திட்டமிடப்பட்டிருந்தது. அந்த இலக்குகளின் கீழ் 48 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக திட்டமிடப்பட்ட போதும் அதில் 18 செயற்பாடுகள் மாத்திரமே நிறைவேற்றப்பட்டிருந்தன. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் ஆண்டின் போது நிறைவேற்றப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**(i) நிறைவேற்றப்படாத செயற்திட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நடமாடும் விற்பனைக் கடைகளை மேம்படுத்துதல், மகளிர் பொருளாதாரத்தை ஊக்குவித்தல் என்பவற்றிக்காக கற்றாளை கன்று பயிர்ச்செய்கை மற்றும் யக்கல - கம்பஹா நகரங்களில் கிராம உணவு உற்பத்தி விற்பனை செய்வதற்கு சந்தையொன்றை ஏற்படுத்துதல் என்ற மூன்று செயற்பாடுகள் 2019 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், பாதீட்டில் நிதி ஏற்பாடு ஒதுக்கப்படாதிருந்ததுடன், 2019 இன் பாதீட்டின் மூலம் ரூபா 30,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டு, சூபசாஸ்திர செயலமர்வும், ரூபா 3,700,000 தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டு குடியிருப்புக்களை நகரமயப்படுத்தல் மற்றும் சபைக்குச் சொந்தமான விளையாட்டு மைதானத்தை பராமரித்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்த திட்டங்களுக்காக பாதீட்டில் நிதி ஏற்பாடு ஒதுக்க வேண்டியிருந்ததுடன், அதனை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தேவையின் அடிப்படையில் திட்டமிடப்படாத செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஏற்பட்டிருந்ததுடன், திட்டமிடப்பட்ட சில செயற்திட்டங்களை நிறைவேற்ற முடியாதிருந்தது. |

**(ii) எதிர்பார்த்த நலன்கள் பெறப்படாமை.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கம்பஹா வைத்தியசாலை கட்டிட தொகுதியின் அருகில் ரூபா 2,000,000 தொகை செலவில் பொது மலசல கூட முறைமையொன்று நிர்மாணிக்கப்பட்டு 10 மாதங்களை விஞ்சியிருந்த போதிலும், இந்த மலசல கூடம் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்மாண செயற்திட்டங்களில் எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய உட்கட்டமைப்பு வசதிகளின் கீழ் அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் 17 கடைகளில் இருந்து ரூபா 3,191,756 | பெறவேண்டிய வருமானங்களை விரைவாக | தற்போது இதற்காக முறையான திட்டமொன்று |

| | | | |
|---|---|---|---|
| | தொகையும், மேற்கூறப்பட்ட செயற்திட்டத்திற்குரிய ஏனைய 48 கடைகளில் இருந்து ரூபா 10,596,383 தொகையும் ஆக ரூபா 13,788,139 தொகை நிலுவையாக காணப்பட்டதுடன், கிடைக்க வேண்டிய வருமானத்தை சேகரித்தல் தொடர்பாக சபையின் செயற்படுநிலை மிகவும் நலிவான மட்டத்தில் காணப்பட்டது. | சேகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | தயாரிக்கப்பட்டு சகல தகவல்களும் பூர்த்தி செய்யப்பட்டு உடன்படிக்கையுள்ள கடை உரிமையாளர்களிடம் இருந்து நிலுவைக் கட்டணத்தை அறவிடல் தொடர்பாக வருமான உப குழுவின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) | சபையினால் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்ட 150 பல்வேறு கடைகளுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | கடைகளை வாடகைக்கு வழங்கும் போது முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும். | உடன்படிக்கை கைச்சாத்திடப்படாத கடைகள் அநேகமாக முற்பணம் செலுத்தாமையின் அடிப்படையிலும் கையளித்தல் கட்டணம் செலுத்தாமையின் அடிப்படையிலும் கொடுப்பனவுகளை புறக்கணித்து இருக்கின்ற சகல கடைகளையும் கையேற்று மீண்டும் கேள்வி கோருவதற்காக நடவடிக்கை எடுக்கப்பதற்கு தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாநகர சபைக்குச் சொந்தமான வீதிகளின் அளவு 2249 கிலோ மீற்றர் ஆக இருந்த போதிலும் அவற்றை வர்த்ததமானியில் பிரசுரித்து கையேற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், நில வரைபடமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வீதிகளின் நில வரைபடம் தயாரிக்கப்பட்டு விரைவாக வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நில வரைபடம் அவசியமாக இருந்தமையால் வீதிகளின் நில வரைபடம் ஒன்று நில அளவை திணைக்களத்தின் மூலம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஈ) | உறுப்பினர்களின் நிதி ஏற்பாட்டின் கீழ் பகிர்ந்தளிப்பதற்காக 2019 சனவரி 21 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 99,320 பெறுமதியான 104 மண் வெட்டிகள் 2020 யூன் 06 ஆம் திகதி வரையிலும் | திட்டமிடப்பட்ட பிரகாரம் விரைவாக உரிய மண் வெட்டிகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். | மிகுதி மண் வெட்டிகள் சபையின் தேவைகளுக்காகவும் ஏனைய தேவைகளுக்காவும் கருதி எதிர்காலத்தில் பகிர்ந்தளிப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | கம்பஹா மாநகர சபைக்குச் சொந்தமான 99 பொது வசதிகளுக்கான காணிகள் காணப்பட்டதுடன், அதில் 60 காணிகளுக்காக உரித்துறுதி பெறப்பட்டிருக்கவில்லை. 19 காணிகளுக்காக வெளிப்படுத்தல் உரித்துறுதி காணப்பட்டதுடன், 03 காணிகளுக்காக அரசாங்க அதிபரின் கையளித்தல் கடிதம் காணப்பட்டது. மேலும், சபைக்குச் சொந்தமான பொதுக் காணிகளில் உள்ள மயான நிலங்களில் காடுகள் வளர்ந்து வேலி எல்லைகள் மற்றும் பெயர் பதாதைகள் இன்றி பாதுகாப்பு இன்றி காணப்பட்டது. | பொதுக் காணிகளின் உரித்துறுதிகளை பெற்றுக் கொள்வதற்கும் வேலி எல்லையினை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபைக்குச் சொந்தமான பொதுக் காணிகளின் உரித்துறுதிகளை பெற்றுக் கொள்வதற்கு விஷேட குழுவொன்றின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. உரிய காணிகள் மற்றும் மயான நிலங்களின் எல்லை வேலியினை அமைபதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஊ) | சமூக சபைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக 2019 யூன் 17 ஆம் திகதி ரூபா 798,750 தொகையில் கையுடன் கூடிய 750 பிளாஸ்டிக் கதிரைகள் மற்றும் 2019 ஆகஸ்ட் 15 ஆம் திகதி ரூபா 1,125,000 தொகையில் 10’x20’ கூடாரங்கள் 20 கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2019 செப்தெம்பர் வரையிலும் பகிர்ந்தலிக்கப்படாமல் பிரதான அலுவலகத்தின் கட்டிடத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தது. | விரைவாக பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சமூக சபைகளுக்கு பகிர்ந்தளித்தல் தேர்தலினால் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், எதிர்காலத்தில் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

### (அ) பதவி வெற்றிடம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 மே 19 ஆம் திகதி முதல் மாநகர செயலாளர் பதவியும், 2015 மற்றும் 2019 ஆம் ஆண்டு முதல் 04 வருமான பரிசோதகர் பதவிகளும் வெற்றிடமாக காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு உள்ளூராட்சி திணைக்களத்திற்கு கோரிக்கை விடுக்கப்படுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | வெற்றிடமாக காணப்படுகின்ற முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட திணைக்கள ரீதியான ஆரம்ப வெற்றிடங்கள் 49 இற்காக முறையான ஆட்சேர்ப்பு இன்றி 104 ஊழியர்கள் செயற்திட்ட அடிப்படையில் சேர்க்கப்பட்டு 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 26,511,440 தொகையொன்று சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்ட ஊழியர்களை சேர்க்கும் போது உரிய அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | சேவை தேவையின் அடிப்படையில் சபை அங்கீகாரம் பெற்று செயற்திட்ட அடிப்படையில் ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். |

(ஆ) **சம்பளமற்ற விடுமுறை**

-------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 39 ஊழியர்கள் 1177½ நாட்கள் சம்பளமற்ற விடுமுறை தினங்களை எடுத்திருந்தனர். | உரிய சட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் இந்த ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு வழங்கப்படாது என அறியத்தருகின்றோம். |

**(இ) ஊழியர் கடன்**

-------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற 34 ஓய்வு பெற்ற ஊழியர்களிடம் இருந்து ரூபா 264,105 தொகையான கடன் மீதியும், இடம் மாற்றலாகிச் சென்ற 06 பேர்களிடம் இருந்து ரூபா 7,450 தொகையான கடன் மீதியும், இலங்கை மின்சார சபையின் சேவையில் நியமிக்கப்பட்ட 07 ஊழியர்களிடம் இருந்து ரூபா 35,170 தொகையான கடன் மீதியும் ஆக ரூபா 308,784 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

(ஈ) **ஊழியர் பிணை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2004 யூலை 09 ஆம் திகதிய எல்பீ/05/2004 ஆம் இலக்க உள்ளுராட்சி ஆணையாளரின் (மே.ம.) ஊழியர் பிணைப் பணம் பெற்றுக்கொள்ளும் சுற்றறிக்கையின் பிரகாரம் ஊழியர் பிணை வைக்க வேண்டிய 34 உத்தியோகத்தர்களிடம் இருந்து பிணைப் பணம் பெறப்படாதிருந்ததுடன், 12 பேர்களிடம் இருந்து மாத்திரம் பிணைப் பணம் பெறப்பட்டிருந்தது. அவ்வாறு பெறப்பட்ட ஊழியர் பிணை வைப்பு ரூபா 21,705 தொகை 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது டன், உரிய பிணை வைப்பு மீதி கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டும். | ஊழியர் பிணைப் பணம் வைக்காத உத்தியோகத்தரிடம் இருந்து பிணைப் பணத்தை பெற்றுக் கொள்வதற்கும் பெறப்பட்டுள்ள பிணைப் பணத்தை கணக்குகளில் காண்பிப்பதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபைக்கு சொந்தமான கம்பெக்டர் வாகனம், 02 டெக்டர் வாகனங்கள் மற்றும் பெக்கோ இயந்திரம் என்பன பதிவேடுகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | உரிய சொத்துக்கள் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்பட வேண்டும். | பதிவேடுகளுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.4.2 சொத்துக்களில் இருந்து பெறவேண்டிய வருமானம் கிடைக்கப் பெறாமை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபையின் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்காக 1982 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டுள்ள மூன்று உத்தியோகபூர்வ இல்லங்களில் இருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 63,149 தொகை நிலுவையாக காணப்பட்ட போதிலும், இந்த நிலுவையை அறவிடுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் 03 | சொத்துக்களில் இருந்து கிடைக்க வேண்டிய வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | தற்போது நிலுவையாக உள்ள உத்தியோகபூர்வ இல்லங்களின் நிலுவை வாடகை அறவிடும் இயலுமை காணப்படுகின்ற வீடுகளில் ஊழியர்களின் சம்பளத்தில் இருந்தும், |

| | | |
|---|---|---|
| உத்தியோகபூர்வ இல்லங்களில் சபையின் ஊழியர்கள் அல்லாமல் வெளித்தரப்பினர் குடியிருந்து வருகின்றமை அவதானிக்கப்பட்டது. | | ஓய்வூதிய பணிக்கொடையில் இருந்தும் அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அறவிட முடியாதுள்ள பெறுமதியாயின் அதற்கான சட்ட நடவடிக்கைகளை எடுத்து அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.4.3 கையேற்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி அமைச்சிலிருந்து 2015 ஆம் ஆண்டின் போது நன்கொடையாக கிடைக்கப்பெற்ற 03 வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கையேற்பதற்குரிய ஆவணங்கள் உள்ளூராட்சி அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

**3.4.4 விளைவற்ற / குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) உயிரில் வாயு உற்பத்தி செய்யும் செயற்திட்டத்தில் 14 வருடங்கள் முதல் 06 வீடுகளுக்கும் வியாபார நிறுவனத்திற்கும் உயிரியல் வாயு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டில் நகர சபையின் சிற்றுண்டிச்சாலைக்கு மாத்திரம் உயிரியல் வாயு வழங்கப்பட்டு ரூபா 22,000 தொகையான வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த உயிரியல் வாயு செயற்திட்டம் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | உயிரியல் வாயு அலகில் இருந்து உச்ச அளவிலான பயன்பாடு பெறப்பட வேண்டும். | விலையினைக் குறைத்து வழங்குமாறு வீட்டு உரிமையாளர்கள் கோரியிருந்த போதும் அதற்கு சபை இணங்காதிருந்ததுடன், தற்போது சிற்றுண்டிச்சாலைக்கும் தேவையற்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) மீளாய்வாண்டில் இறுதி திகதி வரை பல்வேறு இடங்களில் காணப்பட்ட 32 கடைகள் விளைவற்று காணப்பட்டது. | உரிய வசதிகளை வழங்கி மீண்டும் கேள்விகோரி மீள | உரிய வசதிகளை வழங்குவதற்கு முடியாமையின் அடிப்படையில் கேள்வி கோருவதற்கு |

| | | |
|---|---|---|
| | வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதும் அது பெறப்படாமையின் அடிப்படையில் ஏற்பட்டிருந்தது. |

**3.5 இனங்காணப்பட்ட நட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2005 முதல் 2015 ஆம் ஆண்டு வரை சேவையாற்றிய 18 செயற்திட்ட ஊழியர்களுக்கு உரிய ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 10(1) மற்றும் 10(2) இன் பிரகாரம் ஊழியர்களினாலும் சபையினாலும் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்பு பணம் முறையே ரூபா 1,135,590 மற்றும் ரூபா 1,703,386 தொகையை செலுத்துவதற்கு தவறியமையின் காரணமாக ரூபா 1,419,487 தொகையான மிகை கட்டணமொன்றை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் பிரகாரம் பங்களிப்பு பணம் குறித்த திகதியில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமையினால் எதிர்காலத்தில் வழக்குத் தீர்ப்பொன்று கிடைத்ததன் பின்னர் செலுத்த வேண்டி ஏற்படுமாயின் உரிய உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) 54 ஊழியர்களுக்கான 2015 ஆம் ஆண்டிற்கான ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய பங்களிப்பு பணம் ரூபா 432,313 தொகை செலுத்தாமையினால் அந்த தொகை மற்றும் அதற்குரிய ரூபா 216,150 தொகையான மிகைக் கட்டணம் என்பன செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | உரிய ஆண்டுகளின் குறித்த திகதிகளில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்பு பணம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமையினால் எதிர்காலத்தில் வழக்குத் தீர்ப்பொன்று கிடைத்ததன் பின்னர் செலுத்த வேண்டி ஏற்படுமாயின் உரிய உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

**(அ) வீட்டு வாடகை செலுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்காளருக்காக உத்தியோகபூர்வ விடுதி உரித்து இல்லாதிருந்த போது | உத்தியோகபூர்வ விடுதி | உத்தியோக பூர்வ வீட்டு வாடகைக்கு |

| | | |
|---|---|---|
| வாடகை அடிப்படையில் வீடொன்று பெறப்பட்டு அவருக்கு வழங்கப்பட்டிருந்தது. இதன் போது வெளித்தரப்பினருக்கு 100,000 தொகையான முற்பணம் (வைப்பொன்று) மற்றும் மாதாந்தம் ரூபா 22,000 வீதம் ரூபா 330,000 வீட்டு வாடகையொன்று 2018 ஒக்தோபர் முதல் 2019 திசெம்பர் வரை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், தாபன விதிக் கோவையின் XIX அத்தியாயத்தின் 5.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் அந்த கால எல்லைக்காக ரூபா 125,713 தொகையொன்று உத்தியோகபூர்வ வீடு உரித்தில்லாத உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடப்பட்டிருந்ததுடன், ரூபா 204,287 செலவில் சபையினால் செலுத்தப்பட்ட ரூபா 100,000 முற்பண தொகையும் சபை அங்கீகாரம் இன்றி முற்கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. | உரித்தில்லாத உத்தியோகத்தருக்கு வீட்டு வாடகை செலுத்த முடியாது. சபை அங்கீகாரத்தின் கீழ் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேலதிகமான தொகையும் பெறப்பட்டு எஞ்சிய தொகை சபை செலவினமாக கருதி அந்த வசதிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. நகர பிதாவின் மேவுகை அங்கீகாரத்தின் கீழ் மற்றும் சபையின் அங்கீகாரத்தின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. |

**(ஆ) வாகனங்களை கொள்வனவு செய்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 மார்ச் 17 ஆம் திகதிய 1/2016 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 2.2 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுத் திறைசேரியின் முன் அங்கீகாரம் மற்றும் ஏனைய வழிகாட்டி கோவைகளில் உள்ளவைகள் பின்பற்றப்பட வேண்டியிருந்த போதிலும், பொதுச் சபை தீர்மானத்தின் அடிப்படையில் மாத்திரம் மோட்டார் வாகனமொன்று 2019 ஏப்ரல் 12 ஆம் திகதி ரூபா 4,315,575 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் முன் அங்கீகாரம் மற்றும் ஏனைய வழிகாட்டி கோவைகள் கட்டாயமாக பின்பற்றப்பட வேண்டும். | சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

## 3.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2019 யூன் 04 ஆம் திகதி ரூபா 199,980 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட 6060 பிளாஸ்டிக் பூச்சாடிகளில் 5000 பூச்சாடிகள் 2019 ஆகஸ்ட் 30 ஆம் திகதி விவசாய | திட்டமிடப்பட்ட பிராகரம் விரைவாக உரிய பகிர்ந்தளித்தல்கள் மேற்கொள்ளப்படல் | தேர்தல் காலப்பகுதியாக இருந்தமையால் பகிர்ந்தளிப்பதற்கு முடியாதிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | சங்கங்களுக்கு வழங்கப்பட்டு மிகுதி 1060 பூச்சாடிகள் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. மேலும் விவசாய சங்கத்தின் பெயரில் வழங்கப்பட்ட பூச்சாடிகளில் 3000 பூச்சாடிகள் உறுப்பினர்களின் வீடுகளில் காணப்பட்டமை 2019 ஒக்தோபர் 01 ஆம் திகதி மேற்கொள்ளப்பட் பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | வேண்டும். | அந்த பகிர்ந்தளிப்புக்களை மேற்கொள்ள வேண்டாம் என சுற்றறிக்கை விநியோகிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2019 ஏப்ரல் 08 ஆம் திகதி ரூபா 149,250 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட 150 கதிரைகள் 2019 ஏப்ரல் 08 ஆம் திகதி சமூக சபைகளுக்கு விநியோகிக்கப்பட்டமை களஞ்சிய பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட போதிலும், அவைகள் சங்கங்களில் காணப்படாதிருந்ததுடன், 2019 செப்தெம்பர் 27 ஆம் திகதி அளவில் அந்த கதிரைகள் உறுப்பினர்களின் வீடுகளில் வைக்கப்பட்டிருந்தது. மேலும், சமூக சபைகளுக்காக மேற்கூறப்பட்ட பொருட்களை வழங்குதல் 2019 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சமூக சபைகளுக்கு விநியோகிக்கப்பட்டமை களஞ்சிய பதிவேடுகளில் குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்களின் போது விரைவாக விநியோகிக்கப்பட வேண்டும். மேலும் செயல்நடவடிக்கைத் திட்டத்திலும் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சமூக அபிவிருத்தி பிரிவின் மூலம் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

**3.8 ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 யூன் 25 ஆம் திகதி வரையிலும் 24 செயற்திட்டங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன், அந்த சகல செயற்திட்டங்களினதும் உடன்படிக்கை 2019 திசெம்பர் மாதமே கைச்சாத்திடப்பட்டிருந்தது. | செயற்திட்ட வேலைகளை ஆரம்பித்தல் செயற்திறனாக மேற்கொள்ளப்படல் வேண்டும். | நிதி ரீதியான வரையறையில் ஒரு சங்கத்திற்கு பல செயற்திட்டங்கள் வீதம் வழங்கப்பட்டமையால் வேலை ஆரம்பித்தல் தாமதமடைந்திருந்தது. மேலும் Covid - 19 நோய் தொற்றும் இதற்கு காரணமாக இருந்தது. |
| (ஆ) | நடப்பாண்டில் திசெம்பர் மாதம் உடன்படிக்கை செய்யப்பட்டு வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்த ரூபா 23,487,120 பெறுமதியான வேலைகள் பூர்த்தி செய்யப்படாத | உடன்படிக்கை செய்யப்பட்ட செயற்திட்டங்களை விரைவாக நிறைவேற்றுவத | Covid - 19 நிலைமையினால் சபையில் அமுல்படுத்தப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | 19 செயற்திட்டங்கள் 2020 யூன் 25 ஆம் திகதி வரையிலும் உடன்படிக்கை நீடிக்கப்பட்டிருக்கவில்லை. | ற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுகாதார சட்ட விதி மற்றும் நிதி ரீதியான நிலைமையின் காரணமாக வேலைகளை பூர்த்தி செய்தல் தாமதமடைந்திருந்தது. |
| (இ) | 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 122,655,339 மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் ஆரம்பிக்கப்பட்ட யக்கல கடைத் தொகுதிக்கான இறுதி பட்டியலான ரூபா 16,320,023 தொகை 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் கொடுப்பனவு செய்யப்பட்ட போதும், ஆற்றப்பட்ட வேலை தொடர்பாக பொறியியலாளரினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இறுதி பட்டியல் செலுத்தும் போது நிர்மாணங்கள் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் பரிந்துரையின் அடிப்படையில் செலுத்துவதற்கு சபை தீர்மானித்திருந்த போதிலும், அது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது ரூபா 10,917,130 தொகையான பூர்த்தி வேலை பெறுமதியில் விலை அதிகரிப்பாக ரூபா 5,402,892 தொகையும் சேர்க்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. செலுத்துதல்கள் தாமதமடைந்திருந்தமை மற்றும் உரிய மேற்பார்வை இன்றியதன் காரணமாக இந்த தொகையை மேலதிகமாக செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | உரிய செயற்திட்டங்களின் நிதி மற்றும் காலங்களை முகாமைத்துவம் செய்து அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபையில் ஏற்பட்ட நிதி நெருக்கடியினால் அவ்வப்போது செயற்திட்டம் நிறுத்த வேண்டிய ஏற்பட்டிருந்தது. அதனால் காலம் நீடிக்கப்பட்டிருந்தது. இந்த காலத்தில் நிர்மாண பொருட்களின் விலைகள் அதிகரித்தமையின் காரணமாக இந்த பணம் செலுத்தப்பட்டிருந்தது. |